இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

உரிமையியல் மேல்முறையீட்டு எண் 1848 / 2022

திரு. பிஸ்வநாத் பானிக்
மற்றும் ஒருவர் **மேல்முறையீட்டாளர்கள்**

எதிர்

திருமதி சுலங்கா போஸ்
மற்றும்பலர் **எதிர்மேல்முறையீட்டாளர்கள்**

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா

1. 1908-ஆம் ஆண்டு, உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் (உ.வி.மு.ச), கட்டளை VII, விதி 11-இன் கீழ் அதிகாரத்தைச் செலுத்தி வழக்குரையை நிராகரிக்க மறுத்துள்ள விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை செல்லாததாக்கி நீக்கறவு செய்ததன் மூலம் உயர் நீதிமன்றம் மேற்படி மனுவை அனுமதித்தது, அதைத்தொடர்ந்து, உரிமை வழக்கு காலவரையறையினால் தடைசெய்யப்பட்டுள்ளது என்ற முதன்மைக் காரணத்தின்பேரில் உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் வழக்குரையை நிராகரித்து, சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 53(அ)-இன் கீழ் விளம்புகைக்கு மட்டுமேயான உரிமை வழக்கு, உண்மையான உரிமையாளருக்கு எதிராக நிலைக்கத்தக்கதல்ல என்று கல்கத்தா உயர் நீதிமன்றத்தால் உரிமையியல் உத்தரவு எண் 1417/2017-இல் பிறப்பிக்கப்பட்டுள்ள எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மீது அதிருப்தியடைந்து,

மனக்குறையுற்ற அசல் வழக்கின் வாதிகள் தற்போதைய மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளனர்.

2. தற்போதைய மேல்முறையீட்டிற்கு வழிகோலிய பொருண்மைகளின் இரத்தினச்சுருக்கம் பின்வருமாறு:-

2.1. இதிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளர்களான அசல் வழக்கின் வாதிகள், சீல்டா, முதுநிலைப் பிரிவு, உரிமையியல் நீதிமன்றத்தின் முன்பாக இங்குள்ள எதிர்மேல் முறையீட்டாளர்களுக்கு (அசல் வழக்கின் பிரதிவாதிகள்) எதிராக உரிமைமூல வழக்கு எண் 166/2010-ஐ தாக்கல் செய்தனர். உரிமை வழக்கின் வாதிகள் பின்வரும் பரிகாரங்களைக் கோரினர்:

"அ) சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 53(அ)-இன் கீழ் வகைசெய்யப்பட்டுள்ளவாறு, 28.4.1995 - ஆம் தேதியிடப்பட்ட ஒப்பந்தத்தின் பகுதி நிறைவேற்றத்திற்காக வாதியின் உடைமையை உறுதிசெய்வதற்காகவும், வழக்குச் சொத்தின் உரிமை, உரிமைமூல நலனின் விளம்புகைக்காகவும்;

அஅ) 28.4.1995-ஆம் தேதியிடப்பட்ட ஒப்பந்தத்தை செயலுறுத்தும்பொருட்டு, மாற்றளிப்பு ஆவணத்தை வாதிகளுக்கு ஆதரவாக நிறைவேற்றி, பதிவு செய்யவும், முதன்மை பிரதிவாதிக்கு உத்தரவிடுவதற்காகவும்;

(ஆ) மேற்படி பிரதிவாதி, அவரது ஆட்கள் மற்றும் முகவர் ஆகியோர் வழக்குச் சொத்தின் சுவாதீனத்திலும், அமைதியான அனுபோகத்திலும் எந்தவித தலையீடோ மற்றும்/அல்லது எந்தவித இடையூறோ ஏற்படுத்தாமல் தடுக்கும்பொருட்டும், மேலும்

பிரதிவாதி, வாதிகளை வலுக்கட்டாயமாகவோ, சட்டத்திற்கு புறம்பாகவோ வழக்குச் சொத்திலிருந்து நீக்க முயல்வதைத் தடுக்கும்பொருட்டும் நிரந்தர உறுத்துக் கட்டளைக்கான தீர்ப்பாணைக்காகவும்;

(இ)வேண்டுரை (ஆ)-இன் வாசகங்கள்படியான அதே செயல்விளைவின் அடிப்படையில் இடைக்கால விதியுடன்கூடிய தற்காலிக உறுத்துக்கட்டளைக்காகவும்;

********** “

2.2. உரிமை வழக்கின் அறிவிப்பு சார்வு செய்யப் பட்டதன்பேரில், உரிமை வழக்கு காலவரையறையினால் தடைசெய்யப்படுகிறது என்ற முக்கிய காரணத்தின்பேரில், உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் வழக்குரையை நிராகரிக்கவும், சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 53 (அ) -இன் கீழ் முழுமையான விளம்புகைக்கான உரிமை வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் வேண்டுரைத்து விசாரணை நீதிமன்றத்தின் முன்பு பிரதிவாதிகள் விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்தனர். விசாரணை நீதிமன்றம், உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழான அதிகாரத்தைச் செயலுறுத்தி, வழக்குரையை நிராகரிக்க மறுத்து மேற்படி விண்ணப்பத்தை நிராகரித்தது.

2.3. உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் வழக்குரையை நிராகரிக்க மறுத்த விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவில் அதிருப்தியடைந்து, மனக்குறையுற்றதன் பேரில், அசல் வழக்கின் பிரதிவாதிகள், உயர் நீதிமன்றத்தின் முன்பு சீராய்வு விண்ணப்பம்/விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்தனர். உயர் நீதிமன்றம், அதன் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம் விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைச்

செல்லாததாக்கி நீக்கறவு செய்ததோடு, அதனைத் தொடர்ந்து உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தை அனுமதித்துள்ளது. மேலும், உரிமை வழக்கு காலவரையறையினால் தடை செய்யப்படுகிற காரணத்தினாலும், மேலும் சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 53(அ)-இன் கீழ் உண்மையான உரிமையாளருக்கு எதிராக முழுமையான விளம்புகைக்காக உரிமை வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதாலும் வழக்குரையை நிராகரித்துள்ளது.

2.4. உரிமை வழக்கு காலவரையறையினால் தடைசெய்யப்படுகிறது என்ற காரணத்தின் பேரில் வழக்குரையை நிராகரித்தும், உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தை அனுமதித்தும், சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 53(அ) -இன் கீழ் முழுமையான விளம்புகைக்கான உரிமை வழக்கு, உண்மையான உரிமையாளருக்கு எதிராக நிலைக்கத் தக்கதல்ல என்ற உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவில் அதிருப்தியடைந்து, மனக்குறையுற்ற அசல் வழக்கின் வாதிகள் தற்போதுள்ள மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளனர்.

3. வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலை களின்படி, உரிமை வழக்கானது காலவரையறையினால் தடைசெய்யப்படுகிறது என்ற காரணத்தின் பேரில் வழக்குரையை நிராகரித்து உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தை அனுமதித்ததில் உயர் நீதிமன்றம் பிழைபுரிந்துவிட்டது என்று மேல்முறையீட்டாளர் களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.அங்கூர் சூட் முனைப்புடன் வாதுரைத்துள்ளார். உரிமை வழக்கானது, காலவரையறையினால் தடைசெய்யப்படுவதாக தீர்மானிக்கையில், உயர் நீதிமன்றம், உரிமை வழக்கின் வாதக்கூறுகளை முழுமையாகப்

பரிசீலிக்கவேயில்லை மற்றும் வழக்குரையின் வாதக்கூறுகளையும் முழுமையாகப் பரிசீலிக்கவில்லை என்றும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

3.1. வழக்குரையிலுள்ள வாதக்கூறுகளின்படி, சொத்தை மூன்றாம் தரப்பினர் மூலம் உரிமை மாற்றம் செய்யும் நோக்கத்துடன் 10.8.2010/24.8.2010 அன்று நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட நாள்முதல் வழக்குமூலம் எழுந்துள்ளதாக வாதிடப்பட்டுள்ளது. இவ்வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின்படி காலவரையறை குறித்த பிரச்சினையானது, சட்டஞ்சார்ந்த மற்றும் பொருண்மைசார்ந்த கலப்புப் பிரச்சினை என்று கூறலாம்; எனவே, வழக்குரை காலவரையறையினால் தடைசெய்யப்படுகிறது என்ற காரணத்தின்பேரில் உயர் நீதிமன்றம் அதை நிராகரித்திருக்கக்கூடாது என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

3.2. வாதிகள், சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 53(அ)-இன் துணைகொண்டு உரிமை வழக்கில் பரிகாரம் கோரினர், மேலும், நிரந்தர உறுத்துக் கட்டளைக்கான பரிகாரத்தையும் கோரினர் என்ற பொருண்மையை உயர் நீதிமன்றம் முறையாக மதிப்பீடு செய்யவில்லை என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 53(அ)-இன் கீழ் பரிகாரம்/பரிகாரங்கள் பெறுவதில் வாதிகள் வெற்றியடைவார்களா?என்பதைக் குறித்து விசாரணையின் போது பரிசீலிக்கப்படவேண்டியிருக்கும் என்பதும் வலியுறுத்தப் பட்டுள்ளது. ஆயினும், சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 53(அ) -இன் கீழ் விளம்புகைக்கான உரிமை வழக்கு நிலைக்கத்தக்கதேயல்ல என்று கூறமுடியாது என்றும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

3.3. மேற்கூறிய சமர்ப்பிப்புகளுடன் இராம் பிரகாஷ் குப்தா -எதிர்- இராஜீவ் குமார் குப்தா மற்றும் பலர், (2007) 10 எஸ்.சி.சி .59 என்ற

வழக்கின் தீர்மானம் சார்ந்து, தற்போதைய வழக்கில் உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் உயர் நீதிமன்றம் அதன் வரம்பை மீறி வழக்குரையை நிராகரித்துவிட்டது என்று முனைப்புடன் சமர்ப்பிக்கப்பட்டது.

4. அசல் வழக்கின் பிரதிவாதிகளின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.சுமன் குமார் தத், உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவுக்கு ஆதரவளித்துள்ளார்.

4.1. வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, உரிமை வழக்கானது காலவரையறையினால் தடைசெய்யப்படுகின்றது என்ற காரணத்தின்பேரில், வழக்குரையை நிராகரித்ததில் உயர் நீதிமன்றம் பிழையேதும் புரியவில்லை எனப் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. வாதிகளின் கூற்றுப்படியுங்கூட, வழக்குரையின் பத்தி 4-இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வழக்குமூலமானது 2004-ஆம் ஆண்டு எழுந்ததாக வாதுரைக்கப்பட்டுள்ளது. ஆகவே, 2004-ஆம் ஆண்டு, ஏப்ரல்/மே மாதத்தில் வழக்குமூலம் எழுந்துள்ளபோது, மேலும் உரிமை வழக்கு 2010-ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளபோது, அது தெளிவாகக் காலவரையறைச் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது எனப் பணிந்துரைக்கப்பட்டுள்ளது. உரிமை வழக்கானது காலவரையறையினால் தடைசெய்யப்பட்டுவிட்டால், அது உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11 (ஈ)-இன் கீழ் நிராகரிப்பதற்குரியது என்றும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

4.2. அரசப் பேரவையின் தீர்ப்புரையைச் சார்ந்து நின்ற இந்நீதிமன்ற வழக்கான தில்லி மோட்டார் கம்பெனி –எதிர்- யூ.ஏ.

பாஸ்ரூர்கர், ஏ.ஐ.ஆர். 1968 எஸ்.சி. 794-இன் தீர்ப்புரை சார்வுறப்பட்டு, சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 53(அ) -இன் கீழ் விளம்புகைக்கு மட்டுமேயான உரிமை வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது. உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தை அனுமதித்ததிலும், வழக்குரையை நிராகரித்ததிலும் உயர் நீதிமன்றம் பிழையேதும் புரியவில்லை என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

5. நாங்கள் உரிய தரப்பினர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரின் விரிவான வாதத்தைக் கேட்டோம்.

6. எடுத்தஎடுப்பிலேயே, விசாரணை நீதிமன்றம், உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தை நிராகரித்ததோடு, வழக்குரையை நிராகரிக்க மறுத்து விட்டது என்பது கவனிக்கப்படல்வேண்டும். ஆயினும், உயர் நீதிமன்றம், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம், விசாரணை நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நீக்கறவு செய்தும், உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தை அனுமதித்தும், காலவரையறையினால் உரிமை வழக்கானது தடைசெய்யப்படுவதாலும், அதனோடுகூட சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 53(அ)-இன் கீழ் விளம்புகைக்கு மட்டுமேயான உரிமை வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதாலும் வழக்குரையை நிராகாரித்துள்ளது,

7. தற்பொழுது, உரிமை வழக்கு காலவரையறையினால் தடைசெய்யப்படுமா? இல்லையா? என்பதான பிரச்சினையைப் பொறுத்தவரையில், தற்போதைய நிலையில் பரிசீலிக்கப்படவேண்டியது யாதெனில், வழக்குரையிலுள்ள

வாதக்கூறுகளேயாகும். ஓர் உரிமை வழக்கின் முகப்பிலேயே, அது காலவரையறையினால் தடைசெய்யப்பட்டுள்ளது என்று காணப்பட்டால் மட்டுமே, காலவரையறையின் அடிப்படையில், உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11(ஈ)-இன் கீழ் வழக்குரையை நிராகரிக்கமுடியும். இந்தநிலையில் பரிசீலிக்கப்பட வேண்டியது யாதெனில் வழக்குரையிலுள்ள வாதக்கூறுகளே ஆகும்.

மேற்சொன்ன நோக்கத்திற்காக, நீதிமன்றம் வழக்குரையிலுள்ள வாதக்கூறுகளைக் கருத்திற்கொண்டு முழுமையாக வாசித்து பரிசீலிக்கவேண்டும். (மேற்படி) இராம் பிரகாஷ் குப்தா என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு, வழக்குரையிலுள்ள சில வரிகள் மற்றும் பத்திகளை மட்டுமே வாசித்துவிட்டு, அதன் தொடர்புடைய மற்ற பகுதிகளைப் புறக்கணித்து, உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11 (ஈ) -இன் கீழ் வழக்குரையை நிராகரிப்பது அனுமதிக்கத்தகாததாகும். மேற்படி தீர்மானத்தில் பத்தி 21-இல் பின்வருபவை கருத்துரைத்துத் தீர்மானிக்கப்பட்டது:

"21. முன்பே கருத்துரைக்கப்பட்டுள்ளவாறு, கட்டளை 7, விதி 11 (ஈ)-இன் கீழ் வழக்குரையை நிராகரிப்பதற்காக தாக்கல் செய்யப்படும் விண்ணப்பத்தில் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பாக வழக்குரையின் வாதக்கூறு முழுவதையும் சரிபார்ப்பது முறையானதாகும். மேற்குறிப்பிடப்பட்ட சான்றாவணங்கள் தெளிவாகக் காண்பிப்பது என்னவென்றால், உரிமை வழக்கு எண் 183/1974-இல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையானது 1986-ஆம் ஆண்டில் வாதிக்கு தெரியவந்தபோது, உரிமை வழக்கு எண் 424/1989-இல் அசிமா ஆர்கிடெக்ட் -எதிர்- இராம் பிரகாஷ் என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது, அதில்

முந்தைய தீர்ப்பாணையின் நகல், வழக்கு பதிவாவணத்தில் வைக்கப்பட்டதையடுத்து, அவர் விரைந்து நடவடிக்கைகள் எடுத்து, விளம்புகைக்காகவும், மாற்றாக உடைமைக்காகவும் உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார் என்பதேயாகும். 1963-ஆம் ஆண்டு, காலவரையறைச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 59-இன் கீழ் அவருக்கு தெரியவந்த நாளிலிருந்து முதல் மூன்று ஆண்டு காலத்திற்குள் ஓர் உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவேண்டும் என்பதில் சர்ச்சை இல்லை. உயர் நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டவாறு, வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் போதாததாகவும், முழுமையற்றதாகவும் இருந்ததெனக் கூறமுடியாது. கட்டளை 7, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தைத் தீர்மானிக்கையில், சில வரிகளையோ, பத்திகளையோ தனித்து வாசிக்காமல், வாதுரைகளின் மெய்யான உட்கருத்தை கண்டறியும் பொருட்டு அவை முழுமையாக வாசிக்கப்படவேண்டும்.எங்களது கருத்துப்படி, விசாரணை நீதிமன்றமும் உயர் நீதிமன்றமும் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தொடர்புடைய வாதக்கூறுகளை கவனிக்கத் தவறிவிட்டன. "

7.1. மேற்படி தீர்முடிவிலிருந்தும், மற்றபடி இந்நீதிமன்றத்தால் தொடர் தீர்முடிவுகளில் தீர்மானிக்கப் பட்டுள்ளவாறும், உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தைப் பரிசீலிக்கையில், நீதிமன்றம் வழக்குரையிலுள்ள ஒட்டுமொத்த வாதக்கூறுகளையும் வாசிக்கவேண்டுமேயன்றி சில வரிகளை/பத்திகளை மட்டுமே வாசித்துவிட்டு, அதன் தொடர்புடைய பிற பகுதிகளைப் புறக்கணித்துவிட்டு, வழக்குரையை நிராகரிக்க இயலாது.

7.2. (மேற்படி) இராம் பிரகாஷ் குப்தா என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட சட்டத்தை தற்போதுள்ள வழக்கின் பொருண்மைகளுக்குப் பயன்படுத்தி, வழக்குரையின் வாதக்கூறுகளை முழுமையாக வாசித்ததன்பேரில், உரிமை வழக்கானது, அதன் முகப்பிலேயே காலவரையறையினால் தடைசெய்யப்பட்டுள்ளது என்று இக்கட்டத்தில் கூறமுடியாது.வழக்குரையில் வழக்குமூலம் குறித்த அவசியமான வாதக்கூறுகள் 6, 7 மற்றும் 10-ஆவது பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன, அவை பின்வருமாறு:

> "6. தற்போது அப்பகுதியிலுள்ள நிலத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டதன் காரணமாக, வாதிகளை எப்படியாவது வழக்குச் சொத்திலிருந்து வெளியேற்றுவதற்கு மேற்சொன்ன பிரதிவாதி மிகவும் தீவிரமாக இருந்து, சொத்தை மூன்றாம் தரப்பினர் மூலம் வாங்கி உரிமை மாற்றம்பெறும் எண்ணத்துடன் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வெளிவரும் செய்தித்தாள்களில் 10.8.2010, 24.8.2010-ஆம் தேதியிடப்பட்ட ஆனந்த பஜார் பத்திரிக்கையிலும், 22.8.2010-ஆம் தேதியிடப்பட்ட டெலிகிராப்பிலும் உள்ள பல்வேறு இணைப்புகளிலும் செய்தி வெளியிட்டார்.
>
> 7. 29.8.2010 அன்று மேற்சொன்ன பிரதிவாதி, அவரது ஆட்கள் மற்றும் முகவர் ஆகியோர் திரண்டுவந்து "காவலாளி" யை முரட்டுத்தனமாக பிடித்துத்தள்ளி வழக்குச் சொத்திற்குள் அத்துமீறி நுழைய முயன்றனர், ஆயினும், எதிர்த்தாக்குதலின் காரணமாக அவர்களை வெளியேற்றும் முயற்சியில் பிரதிவாதி வெற்றிபெறவில்லை. ஆனால் பிரதிவாதி, அவரது கூட்டாளியுடன் சேர்ந்துகொண்டு வன்முறையாகவும், பலவந்தப்படுத்தியும், எந்த வழியிலாவது

வாதிகளின் சட்டப்படியான உடைமையிலிருந்து அவர்களை வெளியேற்றத் தீர்மானித்தார். மேற்படி வழக்கின் உரிய தீர்ப்புக்காக வரிசைப்படியான பிரதிவாதிகள் அவர்களுக்கு எதிராக எந்தக் கோரிக்கையும் இன்றி உரிமை வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

10. இந்த உரிமை வழக்கின் வழக்குமூலமானது, இந்தக் கற்றறிந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட, எண் 3/3(அ), பழைய எண் 3, குருதாஸ் தத்தா கார்டன் லேன், பி.எஸ். உல்தடங்கா, கல்கத்தா-700 067 என்ற வளாகம் தொடர்பாக 29.8.2010 அன்று எழுந்துள்ளது. "

7.3.தற்போதுள்ள வழக்கில், உரிமையியல் வழக்கானது, காலவரையறையினால் தடைசெய்யப்படுகிறது என்று தீர்மானிக்கையில் உயர் நீதிமன்றமானது, வழக்குரையிலுள்ள வாதக்கூறுகளை முழுமையாக பரிசீலிக்காமல் 4-ஆவது பத்தியிலுள்ள வாதக்கூறுகளை மட்டுமே பரிசீலித்துள்ளது.

7.4.வழக்குரையை நிராகரிக்கையில், உயர் நீதிமன்றமானது, சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின், பிரிவு 53 (அ) -இன் கீழ் முதன்மை உரிமையாளருக்கு எதிராக விளம்புகைக்கு மட்டுமேயான உரிமை வழக்கு நிலைக்கத் தக்கதல்ல என்று கருத்துரைத்து தீர்மானிப்பதற்காக (மேற்படி) தில்லி மோட்டார் கம்பெனி என்ற வழக்கிலுள்ள இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்மீது சார்ந்துநின்றது. ஆயினும், சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 53(அ)-இல் வேண்டுரைத்துள்ளவாறு, வாதிகளும் உடைமையில் இருப்பதாகக்கோரி நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான தீர்ப்பாணைக்காகவும்,

விளம்புக்கைக்காவும் வேண்டுரைத்து உள்ளனர் என்பதைக் குறிப்பிடவேண்டியதாகிறது.

உரிமை வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளையின் தீர்ப்பாணைக்கானதாக இருக்கும்போது, வாதிகள், உடன்படிக்கைக்கிணங்க வழக்குச் சொத்தின் உடைமையில் இருந்துவருகின்றனர் என்றும், அதன்பின்னர், அவர்கள் நிலத்தினை மேம்படுத்தி, பன்னிரண்டு ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து உடைமையில் இருந்துவருகின்றனர் என்றும், மேலும் அவர்கள், மாநகராட்சிக்கும் வரி செலுத்திவருகின்றனர் என்றும் உறுதிபடக்கூறப்பட்டுள்ளபோது, உடைமையில் இடையூறு செய்யப்படுவதாகக் கூறப்படும் நாள்முதற் கொண்டே வழக்குமூலம் எழுந்துவிட்டதாகக் கூறலாம். அது அவ்வாறிருக்கையில், நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பாணைக்கான உரிமை வழக்கு காலவரையறையினால் தடைசெய்யப்படுவதாகக் கூறப்படமுடியாது.வழக்குரையைப் பகுதியாக நிராகரிக்கமுடியாது என்பதே அறுதியிடப்பட்ட சட்டக் கருத்துரையாகும்.

வேறுவகையிலுங்கூட, கோரப்பட்ட பரிகாரமானது ஒன்றோடொன்று தொடர்புடையனவாகும். வாதிகள், சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 53(அ)-இன் கீழ் ஏதேனும் பரிகாரத்திற்குரியவர்களா? இல்லையா? என்பதைக் குறித்து விசாரணையின்போதே பரிசீலிக்கவேண்டும். ஆனால், இக்கட்டத்தில், பிரிவு 53(அ)-இன் கீழ் பரிகாரம் கோரும் உரிமை வழக்கு நிலைக்கத்தக்கதேயல்ல என்று கூறமுடியாது. எனவே, உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழான அதிகாரத்தைச் செலுத்தி வழக்குரை நிராகரிப்பதற்குரியதாகிறது என்பதாகும்.

8. மேற்கூறியதைக் கருத்திற்கொண்டும், மேற்சொன்ன காரணங்களின்பேரிலும், உயர் நீதிமன்றமானது, உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் வழக்குரையை நிராகரித்து விண்ணப்பத்தை அனுமதித்ததில் பெரும்பிழை புரிந்துள்ளது.உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழான அதிகாரத்தைச் செலுத்தி, வழக்குரையை நிராகரிக்கையில் உயர் நீதிமன்றம், அதன் அதிகாரவரம்பை மீறிவிட்டது. உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மற்றும் தீர்ப்புரை சட்டப்படியும், சங்கதிகளின்பேரிலுங்கூட நிலைநிறுத்தத்தக்கதல்ல.

9. இதில் மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களின்பேரில், தற்போதுள்ள மேல்முறையீடு வெற்றியடைகிறது. உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் வழக்குரையை நிராகரிக்க மறுத்து விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை செல்லாததாக்கி நீக்கறவு செய்து, உரிமையியல் உத்தரவை அனுமதித்து, அதனைத்தொடர்ந்து உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் வழக்குரையை நிராகரித்து, உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு இதன்மூலம் செல்லாததாக்கப்பட்டு நீக்கறவு செய்யப்படுகிறது. உ.வி.மு.ச., கட்டளை VII, விதி 11-இன் கீழ் வழக்குரையை நிராகரிப்பதற்கு அசல் வழக்கின் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மீட்டளிக்கப்படுகிறது. தற்போது, விசாரணை நீதிமன்றம் சட்டத்திற்கிணங்க அதன் தகுதிப்பாடுகளின்பேரில் வழக்கை மேல்நடத்தும். ஆயினும், தற்போதுள்ள உத்தரவில் இந்நீதிமன்றத்தால் என்ன கருத்துரைகள் அளிக்கப்பட்டு உள்ளனவோ, அவை, உ.வி.மு.ச.,

கட்டளை VII, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தைத் தீர்மானிப்பதற்குட்பட்டவையேயாகும். விசாரணை நீதிமன்றமானது, சட்டத்திற்குட்பட்டு, தகுதிப்பாடுகளின் அடிப்படையிலும், சாட்சியத்தின் அடிப்படையிலும், உரிமை வழக்கினை இறுதியாகத் தீர்மானித்து முடிவு செய்யவேண்டும்.

அதற்கிணங்க, தற்போதுள்ள மேல்முறையீடு அனுமதிக்கப்படுகின்றது.ஆயினும், வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்தவரையில், செலவுத் தொகை குறித்த உத்தரவு ஏதுமில்லை.

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா

மாண்புமிகு நீதியரசர் திரு. பி.வி. நாகரத்னா

புதுதில்லி
14.03.2022

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துக்கொள்வதற்க்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றம் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "